# பேராசிரியர் ஞான சுந்தரம் மறைவு! தமிழுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு!



## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இரங்கல்!

**பே**ராசிரியர் ஞானசுந்தரம் அவர்கள்
மறைந்த செய்தி அறிந்து
மிகுந்த வேதனை அடைந்தேன்!
பேராசிரியர் ஞானசுந்தரம் என் இனிய நண்பர்
பச்சையப்பன் கல்லூரியில்
நான் BA படித்துக்கொண்டு இருந்தபோது
அவர் M.A படித்துக்கொண்டு இருந்தார்.
கல்லூரிகளுக்கிடையே நடக்கும் பேச்சுப்போட்டிகளில்
நானும் ஞானசுந்தரமும்
பச்சையப்பன் கல்லூரி சார்பில் கலந்துகொண்டதும்,
ஏராளமான சுழற்கோப்பைகளையும், பரிசுகளையும் வாங்கி
எங்கள் கல்லூரிக்கு பெருமை சேர்த்ததும்,
நேற்று நடந்தது போன்று என்நினைவில் இருக்கிறது!
பேராசிரியர் ஞானசுந்தரம் மறைவு
தமிழுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு!
அவரது குடும்பத்திற்கு
எனது ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்துக்கொள்கிறேன்.



**துரைமுருகன்**
*கழகப் பொதுச் செயலாளர்*

## கோவை மாநகரில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

கோவை, ஜன. 30 –

கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சிவபிரகாசம் வரவேற்புரையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை யாற்றினார்.

இதில் கழக தீர்மானகுழு செயலாளர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் அருள்மொழி, மீனா ஜெயக்குமார், தமிழ்ச்செல்வன், நாச்சிமுத்து, கோகுல், முரா.செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

#### விமானம் தொடர்பான பணிகளுக்கு 90% வரை வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் அவலம்!

# ஒன்றிய அரசின் ‘தற்சார்பு முழக்கம்’ வெற்று விளம்பரம்!

## ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. விமர்சனம்!



புதுடெல்லி, ஜன.30-

விமானங்கள் மற்றும் அதன் MRO (பராமரிப்பு, பழுதுபார்ப்பு, முழுமையான சீரமைப்பு) பணிகளுக்கு இன்றும் வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை குறித்து, நாடாளுமன்றத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கேள்வி எழுப்பியிருந்தார். இதில், வெளிநாட்டுச் சார்பை குறைத்து உள்நாட்டிலேயே விமானங்களுக்கான சூழல் அமைப்பை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள்,

உள்நாட்டு உற்பத்தி அமைப்பை வலுவாக்குவதில் அவர்கள் எந்த அளவுக்கு மெத்தனமாகவும், தொலைநோக்கு இல்லாமலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

**90% வரை வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் அவலம்:**

ஒன்றிய அரசு தன்னுடைய பதிலில், 5 முக்கியமான விஷயங்களை ஒப்புக்கொண்டுள்ளது.

1. விமானங்களின் MRO பணிகளுக்காகச் செலவிடப்படும் நிதியில் 80 முதல் 90% வரை இன்றும் வெளிநாடுகளுக்கே செல்கிறது.
2. இதனால் பெருமளவு அந்நியச் செலாவணி வெளியேறுகிறது.
3. விமானங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதால், Downtime எனப்படும் விமானம் பறக்காமல் தரையில் இருக்கும் காலம் அதிகரிக்கிறது.
4. மறைமுகச்செலவுகள், அதாவது ஸ்பேர் எஞ்சின்கள் போன்றவற்றிற்கு அதிகமாக செலவாகிறது
5. இதுபோக, வெளிநாட்டுடன் ஒப்பந்தங்கள், உதிரிபாகங்கள் இறக்குமதி, சர்வதேச சட்ட திட்டங்கள் என நிர்வாகச் சிக்கல் நிலவுகிறது.

இத்தனைப் பின்னடைவு விஷயங்களை பட்டியலிடத் தெரிந்த ஒன்றிய அரசால், ஏன் உள்நாட்டிலேயே இதற்கான நிரந்தர அமைப்பை உருவாக்க முடியவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஓராண்டு அல்ல, ஈராண்டு அல்ல, கிட்டத்தட்ட தொடர்ந்து 11 ஆண்டுகள் ஆட்சி நாற்காலியில் இருந்தும் இந்த நிலை என்பது, நிர்வாகச் சீர்கேட்டின் அடையாளச் சின்னம்.

**கண்துடைப்பு நடவடிக்கைகள் போதுமா, நீண்டகால திட்டங்கள் வேண்டாமா?**

ஒன்றிய அரசு தனது பதிலில், MRO பணிகளுக்கான ஜிஎஸ்டி வரியை 5% ஆகக் குறைத்திருப்பது, உதிரிபாகங்கள் இறக்குமதிக்கு சுங்கவரி விலக்கு அளித்திருப்பது ஆகியவற்றை பெருமையாக குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு வரிச்சலுகைகள் வழங்கப்பட்ட பின்னரும் ஏன் இன்றும் 90% பணிகள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன என்ற அடிப்படைக் கேள்விக்குப் பதிலில்லை.

மேலும், வெறும் இரண்டு இருக்கைகள் கொண்ட ‘ஹன்சா 3’ பயிற்சி விமானத்தை ஒரு உள்நாட்டு விமான உற்பத்தி சாதனையாகக் காட்டி நாடகமாடியிருக்கிறது, ஒன்றிய அரசு. இதன் மூலம், பல்லாயிரம் கோடி மதிப்பிலான இந்திய விமானச் சந்தையின் இறக்குமதிச் சுமையைத் திசைதிருப்ப முடியுமா என்று பார்த்து, பரிதாபமாகத் தோற்றிருக்கிறது.

வரிச்சலுகை, சிறிய விமானங்கள் எல்லாம் மிக மேலோட்டமான நடவடிக்கைகள் மட்டுமே. Raw materials உற்பத்தி, உதிரிபாக தயாரிப்புத் தொழிற்சாலைகள், MRO மையங்கள் என, நீண்டகாலத் திட்டங்களோடு பல தளங்களில் இந்த அரசு தீவிரமாக செயல்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், இன்று வெளிநாட்டு நிறுவனங்களின் கையில் இந்திய விமானப் போக்குவரத்து சிக்கிக் கொண்டிருக்காது.

**சாமானியர்களின் தலையில் முடியும் ஒன்றிய அரசின் அலட்சியம்:**

ஒன்றிய அரசின் அலட்சியமான செயலற்றத் தன்மையால் இந்தியாவிற்கு இரண்டு முனைகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒன்று, விமான நிறுவனங்களின் இயக்கச் செலவுகள் பலமடங்கு அதிகரித்து, அது சாமானியப் பயணிகளின் மீது டிக்கெட் கட்டண உயர்வாக முடிந்திருக்கிறது. இரண்டு, நமது நாட்டுப் பொறியாளர்களின் திறமை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியா பின்தங்கியிருக்கிறது.

இந்த விளைவுகளை இப்போதும் கண்கொண்டு பார்த்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தாமல், தன்னுடைய தற்சார்பு முழக்கங்களை தேர்தல் ஆயுதமாக மாற்றி வாக்குவேட்டையில் மட்டும் தீவிரம் காட்டிக்கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இது மக்களுக்கு இழைக்கும் துரோகம்.

மேலோட்டமான கண்துடைப்பு நடவடிக்கைகளைக் கடந்து, இந்தியாவிலேயே நிரந்தரமான விமானச் சூழல் அமைப்பை உருவாக்கும் உறுதியான திட்டங்களைக் கொண்டு வந்து ஒன்றிய அரசு இயங்க வேண்டும். தேர்தல் நலனில் மட்டும் குறியாக இருக்காமல், தேசிய நலனை முன்னிலைப் படுத்தி, தற்சார்பு என்பதை நடைமுறையில் சாத்தியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# மிரட்டும்... சோழர் படை




**ரா**ஜராஜ சோழனின்
அடிபற்றி
ஆட்சிக்கு வந்த
ராஜேந்திர சோழன்

சோழப் பேரரசின்
பரப்பளவை
ஆழக் கடல் கடந்து
அகலப் படுத்தினான்..

இலங்கை
மாலத்தீவு
கடாரம்
சிரீவிசயம்

மலேயா
சிங்கப்பூர்
சுமத்ரா
கம்போடியா

வியட்னாம்
இந்தோனேசியா
மியான்மர்
வங்கதேசம் என

தெற்காசியா
முழுவதும் அந்த
சுத்த வீரச்
சோழனுக்குச்
சொந்தமானது

கடாரம்
கொண்டவனாகி
கடல் கடந்த
பேரரசை
கட்டி எழுப்பினான்..

மேலும்

தென் இந்திய
பகுதிகளான

தமிழ்நாடு
ஆந்திரம்
கருநாடகா
கேரளம்

தெலுங்கானா
இவற்றோடு
சத்தீஷ்கர் ஒரிசா
மேற்கு
வங்கத்தையும்

அந்த
கம்பீரச் சோழனே
கைப்பற்றினான்..

இப்படி

பொன்னி
நதிக்கரையில்
சூல் கொண்டு

பொற்காலம்
படைத்த

அந்த புறநானூற்று
வீரத்தை

இன்றைய
தமிழகத்தின்
தற்கால
அரசியலோடு
பொருத்திப்
பார்க்கும்

வடக்கிந்திய
கம்பெனியான
பா.ஜ.க...

தூக்கத்தை
தொலைத்துவிட்டு
துடிக்கிறது...

“ராஜராஜ
சோழனாக
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினையும்“

“ராஜேந்திர
சோழனாக
உதயநிதி
ஸ்டாலினையும்“

உருவகம்
செய்து கொண்டு
உதறல்
எடுத்து
குதிக்கிறது...

“உதயநிதி
உதயநிதி” என

ஊரெல்லாம்
உலாவந்து
ஊளையிட்டு
தகிக்கிறது..

“திராவிட மாடல்
நாளை

தேசத்தின்
மாடலாகுமோ”
எனும்
அச்சத்தில்

தலைக்கு
விலை
வைப்போம்
என்றும்

தரம் தாழ்ந்து
குரைக்கிறது..

“ஸ்டாலின்
மோர் டேஞ்சர் than
கருணாநிதி”
என

அன்று

அச்சம் கொண்டு
அலறிய எச்சை
ராஜாக்கள்

இன்று


“உதயநிதி
மோர் டேஞ்சர் than
ஸ்டாலின்“ எனும்

கூடுதல்
நடுக்கத்தில்
குலை நடுக்கம்
கொள்கிறார்
என்றால்

இப்படி
பகைவருக்கு
நடுக்கம் தரும்

நம்
படை நடத்தல்
சரி தானே...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

# டபுள் இஞ்சின் என்பது பம்மாத்து வேலை!

**நா**ங்கள் 28 இஞ்சின் கொண்ட இந்தியா தான் வேண்டும் என்கிறோம்...

இரண்டு இஞ்சின் போதும் என்பதெல்லாம் பம்மாத்து வேலை..!

28 மாநிலங்களும் சேர்ந்து தான் இந்தியா எனும் ஒன்றிய அரசை இயக்க வேண்டும். மாநிலங்களின் பங்களிப்போடு ஒன்றிய அரசு செயல்பட வேண்டுமே தவிர...

ஒன்றிய அரசு நிதியில் அல்லது பங்களிப்பில் எப்படி மாநிலங்கள் செயல்பட முடியும்..?!

அந்தந்த மாநிலத்தின் மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டினையும், நாகரீகத்தையும், உடைகளையும், உணவு பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், கல்வியையும், கடவுள்களையும், வளர்ச்சியையும் அந்தந்த மாநிலமே பாதுகாக்கவும், கட்டமைத்துக் கொள்ளவும் வேண்டுமே தவிர...

மாநிலங்களின் வண்டியை... அந்த மாநிலத்தைப் பற்றி எந்த புரிதலுமே இல்லாத, அந்த மாநில மொழியில் ஓரிரு வார்த்தைகளைக் கூட சரியாக உச்சரிக்க இயலாத அல்லது உச்சரிக்க விரும்பாத ஒன்றிய அரசு நிர்வாகிகள் எப்படி தங்கள் இஞ்சினைக் கொடுத்து ஓட வைக்க முடியும்..?!

இரண்டு இஞ்சின் சர்க்கார். அல்லது டபுள் இஞ்சின் சர்க்கார் என்பதே மாநில சுயாட்சியை அழித்து ஒழித்து. மாநிலங்களின் லகானை தங்கள் கரங்களில் வைத்துக்கொள்ளும் ஒரு கேடு கெட்ட உத்தியாகவே தான் கணிக்க முடியும்.

டபுள் இஞ்சின் சர்க்கார் என்றால். தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படும், தமிழ் படிப்படியாக வழக்கொழிந்து போகும், காத்தாயம்மனும், பேச்சியம்மனும், வீரனும், சுடலை மாடனும், அய்யனாரும், காத்தவராயனும். லக்ஷ்மி, சரஸ்வதி, ராமர், கிருஷ்ணர்களால் முழுமையாக மூடி மறைக்கப்படுவார்கள்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

டபுள் இஞ்சின் சர்க்கார் மாநிலத்தில்... திருப்பூர் குமரனும், வ.உ.சி.யும், வேலு நாச்சியாரும், காந்தியடிகளும், நேருவும் இன்னபிற உண்மையான சுதந்திர போராட்ட தியாகிகளை ஆங்கிலேய துதிபாடிகள் என்று பறைசாற்றி சாவர்கர்களும், கோல்வாக்கர்களும் தான் தேசப்பிதாவாக கற்பிக்கப்படுவார்கள்..!

டபுள் இஞ்சின் சர்க்காரை ஏற்றுக்கொண்டால்... கீழடியும், பொருநைகளும் வெறும் சுடுகாடுகளாக அல்லது இடுகாடுகளாக சித்தரிக்கப்பட்டு.... இந்தியாவின் வரலாறு, இல்லவே இல்லாத சரஸ்வதி நதி நாகரிகத்தில் இருந்து ஆரியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டதாக உலக அரங்கில் பதிவு செய்யப்படும்..! தமிழர் என்ற இனமே, தமிழை தாய் மொழியாகக் கொண்டு தமிழை வேர் மொழியாகக் கொண்டு உருவான பல்வேறு மொழிகளின் ஒட்டுமொத்த திராவிட இனமே, சுய அடையாளத்தை இழந்து, இந்து சனாதனத்தின் இன்னுமொரு அடிமை இன முகமூடியோடு வலம் வர வேண்டியிருக்கும்..!

டபுள் இஞ்சின் சர்க்கார்.... மருத்துவம், பொறியியல், மென்பொருள், வணிகம், கணக்கியல் உள்ளிட்ட உயர் கல்விகளை இந்தியா முழுமைக்கும் பொதுமைப்படுத்தி... அவற்றை , ஒரு சில உயர் சாதியினரும், சில பல பெரும் பண முதலைகளும் மட்டுமே பயிலும் ஒன்றாக மாற்றப் படும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், நம்ம ஊர் அனித்தாக்களுக்கும் மருத்துவக் கல்வி வசமானதை தடுத்து ‘நீட்’ என்ற தேர்வின் மூலம் அங்கிதா சிங்குகளுக்கு தாரை வார்க்கப்படுவதை, இந்த டபுள் இஞ்சின் சர்க்காரால் தடுக்க முடியுமா..?! இஞ்சின் மாநிலத்தின் கரங்களில் மட்டும் இருந்தால் தான் நீட் விலக்கப்படும்.... மீண்டும் அனித்தாக்களும், அங்கம்மாள்களும், தமிழரசன்களும் மருத்துவம் பயில முடியும்..!

இங்கே டபுள் இஞ்சின் சர்க்கார் இருந்த வரையிலும், கூலி வேலை தேடி மகாராஷ்டிரா போன்ற வட மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருந்த தமிழர்கள், மாநில சுயாட்சி பேசிய சிங்கிள் இஞ்சின் சர்க்கார் வந்த பிறகு தான் படிப்படியாக வெளி நாடுகளுக்கு... மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், மென்பொருள் வல்லுநர்களாகவும், கணக்கியல் வல்லுநர்களாகவும் செல்லக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

இன்றைக்கு உச்சக்கட்டமாக, டபுள் இஞ்சின் சர்க்கார் நடந்து வரும் அந்த வட மாநிலத்தவர்கள், கூலி வேலைக்காக சாரை சாரையாக தமிழ்நாடு நோக்கி வரும் சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது..!

வரி வருவாய்கள் அந்தந்த மாநிலங்கள் வசம் தானே இருக்க வேண்டும்..?! அது தானே நியாயம்?! அப்படியான ஒரு மாநில சுயாட்சி நிலை இருந்திருந்தால்.

சிங்கிள் இஞ்சின் சர்க்காராக இருக்கக் கூடிய தமிழ்நாட்டின் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு... ஒன்றிய அரசுக்கு, அதன் பொருளாதாரம், வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் இன்னபிற சுய சேவை தேவைகளுக்காக வருடத்திற்கு ஒரு லட்சம் கோடி ரூபாயை தனது பங்களிப்பாக தமிழ்நாடு வழங்கிக் கொண்டிருந்திருக்கும்!

தேவைக்கும் அதிகமான கனிம வளம், அறிவு சார் மனித வளம், சிறு குறு தொழில்கள் உட்பட மத்திய தர, மிகப்பெரும் உலக நிறுவனங்களின் தொழில் வளம், பெரும் உழைப்பு, கல்வி என்று கடந்த அரை நூற்றாண்டாக சிங்கிள் இஞ்சின் சர்க்கார் மூலமாக செதுக்கிச் செதுக்கி வளர்ந்து நிற்கும் தமிழ்நாடு

தன்னுடைய சொந்த வரி வருவாயிலிருந்தே, மின் கட்டணங்களை இப்பொழுது இருப்பதை விட பாதியாகக் குறைத்திருக்கும், குக்கிராமம் வரையிலான சாலைகள் உலக தரத்திற்கு மேம்படுத்தியிருக்கும், நூறு நாள் வேலை திட்டத்திற்கு சுதந்திர போராட்ட தியாகி வீர மங்கை வேலுநாச்சியார் பெயரோடு 200 நாட்களுக்கு அதுவும் 500 ரூபாய் ஊதியத்தோடு கொடுத்திருக்க முடியும், இன்னும் 100 அரசு மருத்துவக் கல்லூரிகளும், அதனைச் சார்ந்த மருத்துவமனை களும் கூட உருவாகியிருக்கும், உலகின் ஆகச் சிறந்த தொழில் நிறுவனங்கள், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களுக்குச் செல்லாமல், ஆவலுடன் தமிழ்நாட்டுக்கு வந்து கோடிக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு உயர் ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு உருவாகியிருக்கும்

இன்னும் அடுக்கிக் கொண்டே செல்லலாம் ஆனால் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சிங்கப்பூர் தலைவர்கள் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டினைப் போன்று சிங்கையை இன்னமும் தரம் உயர்த்த வேண்டும் என்று அவர்கள் கவுன்சிலில் விவாதித்திருப்பார்கள்!

ஆம், இது வெறும் வார்த்தை விளையாட்டு அல்ல. பேரறிஞர் அண்ணாவின் மாபெரும் தமிழ்க் கனவு இது! இவை அனைத்துமே மாநில சுயாட்சி என்ற ஒன்றை அடைந்தால் மட்டுமே சாத்தியமாகும். அதை விடுத்து.. டபுள் இஞ்சின் சர்க்கார் என்ற மாபெரும் சுழலில் மாட்டிக் கொண்டால், இப்பொழுது நாம் கட்டி கொண்டிருக்கும் கோவணத்தையும் கூட அவர்கள் உறுவி விட்டு... நம்மை கூலி வேலைகளுக்கு வடமாநிலங்களுக்கு மீண்டும் படையெடுக்க வைத்து விடுவார்கள்..!

ஸோ.. மாநிலத்தின் சுயாட்சி எனும் சிங்கள் இஞ்சின் சர்க்காரும்.. இந்த சிங்கிள் இஞ்சின் சர்க்கார்கள் எல்லாம் சேர்ந்து கூட்டாக ஒன்றிய அரசினை இயக்கும் ஒன்றிய கூட்டாட்சியுமே, உண்மையான வளர்ச்சியை மக்களுக்கு அளிக்கும் என்பதை புரிந்து கொண்டு..

மீண்டும் சிங்கிள் இஞ்சின் திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர வாக்களிப்போம் என்று உறுதி ஏற்போம்..!

#### ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் நெமிலிச்சேரி– நடுகுத்தகை ஊராட்சிகளில்

# சி.டி.எச் சாலையின் மைய தடுப்புகளில் மின் விளக்குகள் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜன 30;-

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் நகராட்சி பேருந்து நிறுத்தம் அருகில் ஊராட்சி பொது நிதி மற்றும் பெரு நிறுவன சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு நிதி (சிஇஆர்) நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் நெமிலிச்சேரி-நடுகுத்தகை ஊராட்சிகளில் சி.டி.எச் சாலையின் மைய தடுப்புகளில் மின் கம்பங்கள் அமைத்து தெருமின் விளக்குகள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்.

நெமிலிச்சேரி ஊராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சமும், நடுகுத்தகை ஊராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.26 இலட்சமும், திருநின்றவூர் நகராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.60 இலட்சமும், பெரு நிறுவன சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு நிதி (சிஇஆர்) நிதி திட்டத்தின் கீழ் ரூ.16.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.123.50 இலட்சம் மதிப்பீட்டில் 146 கம்பங்களும், 292 மின் விளக்குகளும் அமைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், திருமணம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைசார்பில்பிம்ஜென்மன் (PM JANMAN) திட்டத்தில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீடுகளின் கட்டுமான பணிகளையும், பாரிவாக்கம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ரூ.78.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டட கட்டுமான பணிகளையும், காட்டுப்பாக்கம் ஊராட்சியில் இன்று (29.01.2026) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ரூ.92.99 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சாலை பணிகளையும், செம்பரபாக்கம் ஊராட்சியில் இன்று (29.01.2026) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைசார்பில்பிம்ஜென்மன் (P ஆ - து யு N ஆ யு N) திட்டத்தில் ரூ.81.44 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீடுகளின் கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மு.பிரதாப்;இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், திருநின்றவூர் நகர்மன்ற தலைவர் உஷாராணிரவி, திருநின்றவூர் நகராட்சி ஆணையர் ராமர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் மா.இராஜி, எஸ்.ஜெயபாலன், நகர செயலாளர் தி.வை.இரவி, ஒன்றிய செயலாளர்கள் டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், பொதுகுழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மகேஷ்பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டார்கள்



திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகராட்சி பேருந்து நிறுத்தம் அருகில் ஊராட்சி பொது நிதி மற்றும் பெரு நிறுவன சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு நிதி (சிஇஆர்) நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் நெமிலிச்சேரி நடுகுத்தகை ஊராட்சிகளில் சி.டி.எச் சாலையின் மைய தடுப்புகளில் மின் கம்பங்கள் அமைத்து தெருமின் விளக்குகள் அமைக்கும் பணிகளை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நகராட்சி ஆணையர் ராமர், கே.ஜெ.ரமேஷ், மா.இராஜி, எஸ்.ஜெயபாலன், தி.வை.இரவி, டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.விமல்வர்ஷன், இளைஞர் அணி கே. சுரேஷ்குமார், அன்பழகன், சி.கமலக்கண்ணன், ஆர்.ரவி, எஸ்.நாகராஜ், பாபு, குணசேகரன் , பி.எல்.ஆர். தேவியோகா, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, எம்.மோகன், கு.தமிழ்செல்வி, நெமிலி சுரேஷ் குமார், சலீம், மற்றும் திமுக நிர்வாகிகள் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.